தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, சித்திரை 25,

2012 மே 7, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு"

நீதிநெறி முறைப்படி நல்லாட்சி நடத்தும் அரசருடைய நாட்டில் பருவ மழையும், குறையாத விளைச்சலும் ஒருசேர நிறைந்திருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

214—

அடையாள அட்டை

***12217—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மாவடப்பு, காட்டுப்பட்டி பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட அடையாள அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், இராவணாபுரம் கிராமத்திற்கு உட்பட்டிருக்கிற மாவடப்பு மற்றும் காட்டுப்பட்டியில் வசித்து வரும் 175 மலைவாழ் மக்களுக்கு கோவை மாவட்டம், வால்பாறை வட்டத்திலிருந்து பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி குடும்ப அட்டைகளை கோவை மாவட்டத்திலிருந்து திருப்பூர் மாவட்டத்திற்கு மாறுதல் செய்ய உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் அனைவருக்கும் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அட்டைகள் வழங்க ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், தக்கலை ஒன்றியப் பகுதிகளிலும், குருந்தங்கோடு ஒன்றியப் பகுதிகளிலும் உழவர் பெருமக்கள் பலருக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட அடையாள அட்டை வழங்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட அடையாள அட்டைகள் வழங்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே அவர் குறிப்பிடுகிற இடத்தில், எந்தப் பகுதியிலே உழவர் பாதுகாப்பு அடையாள அட்டை வழங்கப்படவில்லை என்ற குறிப்புகளைக்*

2012 மே 7]

கொடுப்பாரேயானால், உரிய நடவடிக்கையை வருவாய்த் துறை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

215—

மின் நிலையப் பணிகள்

***99—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியில் கூடுதுறை மலை மற்றும் கரட்டுமேடு ஆகிய பகுதிகளில் 5 மெகா வாட் திறன் கொண்ட மின் நிலையப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆம். பவானி குறுக்கணை-1 புனல் மின் திட்டப் பணிகள், ஏறத்தாழ 89 விழுக்காடு முடிவடைந்திருக்கின்றன. இத்திட்டத்தினால், டிசம்பர் 2012-க்குள் மின் உற்பத்தியைத் துவக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பவானி குறுக்கணை-2 புனல் மின் திட்டப் பணிகள், 96 விழுக்காடு முடிவடைந்துள்ளன. இத்திட்டத்தினால் ஆகஸ்டு 2012—இல் மின் உற்பத்தியைத் துவக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*